In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

Spl.C.C.No. 35/2014

Prosecution witness P.W.25

Name: Sooran

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.01.2026.

**(Accused present.)**

முதல் விசாரணை :–

நான் 2013 ம் வருடம் வீரபாண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். தற்போது போடி ராசிங்காபுரம் கிராமத்தில் வசிக்கிறேன். 2006 ம் வருடம் தேனி மாவட்டம், தேனி தாலுகா, தப்புக்குண்டு தாடிச்சேரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தபோது திண்டுக்கல் லஞ்ச ஒழிப்புப் போலீசார் என்னிடம் ரெங்கசாமி என்பவர் மனைவி தேவி என்பவர் தாடிச்சேரி கிராமத்தில் வசிக்கிறாரா என விசாரித்து சான்று கொடுக்கும்படி கேட்டதன்பேரில் நான் விசாரணை செய்ததில் தாடிச்சேரி கிராமத்தில் ரெங்கசாமி மனைவி தேவி என்ற பெயரில் யாரும் வசிக்கவில்லை என்பது தெரியவந்தது. அதனால் 18.8.2007 ம் தேதியிட்டு அதுகுறித்து நான் மேற்படி போலீசாரிடம் ஒரு சான்று வழங்கினேன். அதுதான் என்னிடம் காண்பிக்கப்படுவதாகும். அந்த சான்று அதசாஆ.84. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை லஞ்சஒழிப்பு போலீசார் விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

தாடிச்சேரி கிராமத்தில் நான் 3 வருட காலம் கிராமநிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். 2006 ம் வருடத்திற்கு முன்பு ரெங்கசாமி மனைவி தேவி என்பவர் தாடிச்சேரி கிராமத்தில் வசித்து வந்தாரா என்றால் அது எனக்குத்

தெரியாது. அதசாஆ.84 சான்றிதழில் கிராமத்தில் உள்ள யார் யாரை இதுபற்றி விசாரித்தேன் என்பது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். அதசாஆ.84 சான்று லஞ்சஒழிப்பு போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.28 17:36:47 +0530

Principal District Judge,
Dindigul.